1712 1712
OFFICE OF THE REGISTRAR OF B… MADRAS …33

உ

குமரன்றுணை

கற்பகநாடு சோமகிரி
இராஜராஜேஸ்வரச் சித்தர்
திருவாய்மலர்ந்தருளிய

# மறைமஞ்சரி
# ஞானக் கும்மி.

கலியுகக் கர்ணன் ஆதியாகுடி
ஆத. இராமநாதத்தேவர்
அவர்கள் பொருளுதவியின்பேரில்

சுவாமி. டி. எஸ். தேவஜி
அவர்களால்

மதுரை செண்ட்ரல்மார்க்கட்தெரு
ம[illegible]மணி விலாசம் பிரஸில்
…ப்பிக்கப்பெற்றது.
…932 [Copy Right.

RL N32
172791

உ
குமரன்றுணை.

கற்பகநாடு சோமகிரி

# இராஜராஜேஸ்வரச் சித்தர்

திருவாய்மலர்ந்தருளிய

# மறைமஞ்சரி ஞானக் கும்மி.

கலியுகக் கர்ணன் ஆதியாகுடி

## ஆ. த. இராமநாதத்தேவர்

அவர்கள் பொருளுதவியின்பேரில்

---

## சுவாமி. டி. எஸ். தேவஜி

அவர்களால்

மதுரை செண்ட்ரல்மார்க்கட்தெரு
மனோன்மணி விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

Registered] 1932 [Copy Right.

OFFICE OF THE REGISTRAR
21 MAR 193
MADRAS

172791



# முகவுரை.

செகத்தி லெஞ்ஞான்றும் சீவர்களின் அன்பைக் கருதிய நவகோடிச் சித்தர்களென்பது தெரிந்தார் முதலிய தேர்ந்தோ ரறிந்த விஷயமாகும். அச்சித்தர் குழாத்தும் அரசர் குழாத்தும் ஒருவராய கற்பகநாட்டுச் சோமகிரியை அரணாகக்கொண்டு பல நாட்டினும் ஆணைசெல்லுமாறு செங்கோலோச்சி, பாண்டித்துரையார், கேரளராயர் மதிமூதுரையார், வரசேரளத்தார், கதிரொளிமுடியார், குடிவெட்டுடையார், திருவரைத்திருக்கணார், திருவீட்டத் தேவனார், திரிகண்டத்திகிரித் தேவராயர், சிவமுடிச்செம் பியர், மணிநதிவரையார், வடகரைக்குமரிராயர், பிடுகுபே ரரையர், முதலாய பதிமூன்று திருநாமங்கள் பெற்றுக் கோப்பெருங் கள்வர் மரபிற்றோன்றிய சந்தச் செந்தமிழ்ச் சக்கரவர்த்தி குலோத்துங்கச்சோழன் வழி வழி சோழன் சூடாமணிச்சித்தர், சிவமணிச்சித்தர், மறைமணிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய ஞானம்பொதிந்த நன்மணம் வீசும் நூற்களை செந்நகரம்பதி அச்சராவதான வித்வான் துங்கன் சொக்கனாண்டித்தேவர் அவர்கள் அச்சிட்டு வெளியாக் யது தமிழ்நாட்டன்பர்கள்யாவரும் அறிந்ததேயாகும்யா தமிழ்நாட்டுச் சித்தர்கள் நூல் அச்சிடுவான் பொருட்டு தேடியும் கிடைத்தற் கரிதாய் வருந்துங்கால் அருட்பாவடிகள் தோடநேரி ந. அழகர்சாமி அம்பலம் அவர்கள் பால் இராஜராஜேஸ்வரச் சித்தர் திருவாய்மலர்ந்தருளிய 'மறைமஞ்சரி ஞானக்கும்மி' என்னும் இச்சுவடு கிடைக்கப் பெற்று கனம். காடாங்குடி ஆதிமூலத்தேவர் சோ. நெடுங்குளம், பெ. அழகுத்தேவர். அலங்காநல்லூர் கு வீரைய நாயுடு. தனியாமங்கலம். மா. அ வேதநாதன், மேலூர். எம். கே. மருதமுத்துப்பிள்ளை. உலகநாத சுவாமிமடம் தர்மகர்த்தா இராமசாமிபிள்ளை இன்னார்நன்முயற்சியானும் கலியுககர்னன் ஆதியாகுடி. ஆத. இராமநாதத்தேவர் அவர்கள் பொருளுதவியானும் அச்சுவாகனமேற்றி அனைவரும் களிப்புறும் வண்ணம் வெளியிடலாகினேன். அருள்க அருள்க.

T. S. தேவஜி.

2375

உ

குமரன் றுணை.

# மறைமஞ்சரி ஞானக்கும்மி.

## நூல்.

மாதவ ஞான மகிமை யரசுறு
மாமறைச் சித்தர் மகிழ்வுமுதற்
பூதல மோத வறைய வதிகம்
புகுபல் வென்னறி வே துணையே. (1)

கங்கண சிங்கக் கடகமே யூரக்
கனவார தீரக் கருணைகரச்
சங்குசக் கரக தாகட்க சாரங்கச்
சாசனி யேமறை மஞ்சரியே. (2)

தவ்வித் தவிக்குது சஞ்சல மாகுது
தண்ணத் துறையிலே தன்னுக்குள்ளே
கவ்விக் குதிக்குது காளைமா டோடுது
கண்ணொளி யேமறை மஞ்சரியே. (3)

ஆழ நீளமுள்ள கோட்டையடி நெஞ்சு
ளைவ ரனுதினங் காவலடி
கோழை கூடாது சமாதி சுழிமுனை
கூடடி யேமறை மஞ்சரியே. (4)

தூல சரீரமென் றெண்ணு தேபினை
துப்புக் கெட்டதென் று சொல்லாதே.
கால காலனைத் திரத்தும் வழியது
கண்டுகொள் வாய்மறை மஞ்சரியே. (5)

கரை யுடலென் றுங் காட்டா தேபொன்னார்
கருதும் வாழ்வைக் கருதாதே
நரை திரைமூப்புப் பிணி யகற்றிட
நாடிடு வாய்மறை மஞ்சரியே. (6)

கல்லாத பேர்கள் மரணமென் பாரிதங்
கண்டறி யாரருள் காணோமென்பார்
வல்லாண்மை பேசு மடையர்க் கிதுபழ
வழக்கங் காண்மறை மஞ்சரியே. (7)

துதிமி குந்தது மேலேயென் பார்கல்லிற்
றுதிபு குந்தது லாவுமென்பார்
மதிமி குந்த வரசி சிவமணி
மகிமை பார்மறை மஞ்சரியே. (8)

ஐந்தெழுத் தென்பா ரறியமாட் டார்மகி
ழானந்த மென்பா ரதையறியார்
மூந்துமுந் தென்பா ருடலறி யார்படு
மூடர்கள் தான்மறை மஞ்சரியே. (9)

விளங்கு ரத்தின மேடையடி மாறன்
விஞ்சை மகிழ்ந்து விளையுமடி
துளங்கு வாலைப் பருவமடி நாத
சுத்தறி வாய்மறை மஞ்சரியே. (10)

காப்புடை ஐவர் கவிழ்க்குகி றார்மணி
கட்டுமே டையைக் கசக்குகிறார்
போய்ப்பார்த்து வெள்ளைப் புறாவைக்கண் டாலுயிர்
போகு மோடிமறை மஞ்சரியே. (11)

கஞ்சா வெறியனுங் கள்ளுக் குடியனுங்
கட்டுகி றான்தொடை தட்டுகிறான்
அஞ்சாத நெஞ்சனும் வஞ்சக் குருடனு
மாருக் கோடிமறை மஞ்சரியே. (12)

பாவல ரென்பார் பதம்பாடு வார்குறப்
பண்ணு மிசைப்பார் பழம்புகல்வார்
கேவலஞ் சுத்தக் கிளையறி யாரினுங்
கேளீமு தேமறை மஞ்சரியே. (13)

கற்பஞ் சொலுமுனி கண்டதென் பாருடற்
கற்பமுங் காணார் கருத்தறியார்
அற்ப சொற்பமல விற்பன சித்தருண்
மையறி வாய்மறை மஞ்சரியே. (14)

வாடாத் தவத்தை யொடுக்கி மடக்கிட
வாணும் வாணுமணி யொன்றுகண்டாற்
கோடாது கோடாது சித்தர் குணுகுணக்
கோடி யறிமறை மஞ்சரியே. (15)

மலமற்ற சாதனங் கற்றோமென் பாரதி
வாசனை பூசி மகிழ்ந்தோமென்பார்
கலமுற்ற விச்சேப தோஷமென் பாருளக்
கட்டறி யார்மறை மஞ்சரியே. (16)

அனுபோ கமின்றி யுத்தி யேதுவயிற்
றன்னர்கட் டன்றிவே தங்களேது
இனியி னியது ஏது புளுகைவிட்
டேறிடு வாய்மறை மஞ்சரியே. (17)

கொடுமை கொடுமை புலால்நிறைத் தலதி
கொடுமை கொடுமை சாதிபிறித்தற்
கொடுமை கொடுமை பறைவியா சன்கதை
கூறுதே டிமறை மஞ்சரியே. (18)

சுத்துந் தவளைக்கி ஞானமே துமோசங்
சுற்ற தவளைக்கி மானமேது
செத்த பிணத்துக்கு ரத்தமே துஇதைத்
தெரிந் தறிமறை மஞ்சரியே. (19)

சத்தி குணமன்றி மற்றே தறியச்
சங்கடச் சாதிச் சழக்கேது
சொத்தை வயிற்றிற்குப் பத்திசெ யுமூடச்
சோம்பர்கூ துமறை மஞ்சரியே. (20)

வட்டக்கோட் டைமகிழ் வானக்கோட் டைமண்ணின்
வாரிக்கோட் டையற வாரக்கோட்டை
கெட்டிக்கோ ட்டைபுல னெட்டுக்கோட் டைக்குளுங்
கேளடி யேமறை மஞ்சரியே. (21)

ஆளுக்காள் காவலாய் மிஞ்சுத டிசுடு
காட்டிற் கணுக வணுகுதடி
ஊளைக்கும் பாளைக்கு மோங்குத டிமன
முள்ளறி வாய்மறை மஞ்சரியே. (22)

கோடிச்சோய் பேறிகள் தாளமிட் டார்பல
கோடி மடையர்கள் கூட்டமிட்டார்
தேடிச்சோ டியெனச் சேரவிட் டாரிதிற்
றெளிய டிமறை மஞ்சரியே. (23)

முக்கிம றவர்க்கெ டுக்கவிட் டுப்பெண்டை
மொள்ளைமா றிக்காசை மோசம்பண் ணும்
வக்கிபொக் கிராமச் சந்திரற் குக்கலை
வாட்டடி யேமறை மஞ்சரியே. (24)

பறக்கும் பச்சிபி றக்குங்கு ருவிகள்
பத்திப்பி டிக்கநான் பார்த்தகி றேற்
றுறக்குந்து றவாற்று றந்தாகா மத்தைத்
துலைத்தே னேமறை மஞ்சரியே. (25)

பேதனுஞ் சாதனும் பிந்திவிட் டான்முழுப்
பிஞ்சனுங் கஞ்சனும் பின்னுந்தொட்டான்
தீதனுங் கோதனுந் தேடிப்பட் டானதிற்
செயித்த துமறை மஞ்சரியே. (26)

சத்த முழக்குமு ரசடித் தேன்மூலா
தாரத்தைக் கண்டு தனிப்பிடித்தேன்
சித்தமு லகம ணம்படித் தேனறி
தீந்தமி ழேமறை மஞ்சரியே. (27)

யாகவே தாந்தனு மோடிவிட் டான்மட
வம்பகங் காரனுஞ் செத்துவிட்டான்
பாகமோ காந்தகன் பட்டுவிட் டான்சுபப்
பார்த்தி யேயமறை மஞ்சரியே. (28)

கந்தங்கள் மூன்று கணத்துக்கு ளேமண
கந்தங்கள் மூன்று கணக்குக்குள் ளே
இந்திரி யந்தலைக் கேற்றுஞ்சித்தர் முறை
இதம றிமறை மஞ்சரியே. (29)

எட்டெழுத் தெல்லா மெடுத்துப்பார்த் தேனிதிச்
சென்னியி ருந்துமி ளைத்துப்பார்த்தேன்
சேட்டையன் றியுளப் பூட்டைக்கா ணேமிதிற்
றெரிதெ ரிமறை மஞ்சரியே. (30)

செங்கோல் தழைப்பதுந் தேவை தொடுப்பதுந்
தீவுகள் தோறுந் திரிவதுவும்
மங்காத சித்தர்ம கிமைக் குயர்சிவ
மணிவ ழிமறை மஞ்சரியே. (31)

அஞ்ஞான மோச்சக் கடலைவிட் டேன்பசி
யன்னகோ சத்தை யடக்கிவிட்டேன்
மெஞ்ஞான ரூபந் தரித்துவிட் டேன்மகிழ்
வேண்டடி யேமறை மஞ்சரியே. (32)

மாதகம் பச்சைப் பவள மரகத
வாவிங்கித் தில மணிவயிரப்
போதகக் கல்விமோ னஞான நிலையும்
பூத்தவி ழுமறை மஞ்சரியே. (33)

ஐயறி வென்பா ரகமறி யாரிக
வானந்தங் காணா ரருள்தெரியார்
மெய்யறி வொன்றை இதத்துக்கு ணோக்கிடின்
மேலாம் பதம்மறை மஞ்சரியே. (34)

ஓருரு வாகி யுலகாகிச் சரத்
தோன்றுவ வாகி யுளமாகிப்
பேருரு வாகிப் பிதாவா கிவரும்
பெண்மணி யேமறை மஞ்சரியே. (35)

பருதி யிருப்பதுந் தன்னுக்குள் ளேஞானப்
பருதி யிருப்பதுந் தன்னுக்குள்ளே
விருதிக் கல்லை வணங்கு மிழிஞரை
வேண்டா தடிமறை மஞ்சரியே. (36)

வித்துக்கு வித்தாய் வெளிக்குள் வெளியாய்
விகிதா விகித விதைமணியாய்ச்
சத்திக்குஞ் சித்தாய்ச் சமைந்தசொ ரூபத்தைத்
தானறி வாய்மறை மஞ்சரியே. (37)

எல்லாம் நிறைந்தவன் சொல்லுக்குள் ளேபுரட்
டெல்லா நிறைந்தவன் கல்லுக்குள்ளே
உல்லாச மாய்ப்பூசை பண்ணு மடையரை
உரி யுரிமறை மஞ்சரியே. (38)

வீரர் மதிக்கப்பா ராண்ட விகசித
வேலா யுதச்சித்தர் வேண்மகன்யான்
பாரி லுரைத்தேன் மிகுக்கு மதிகுலப்
பைங்கிளி யேமறை மஞ்சரியே. (39)

ஊற்றுக் குளமுள்ளி ருக்கு தடிநாத
மொன்றினாற் காச்சி யுவக்குதடி
சிற்றத்தை நீக்கித் தெளியிற் றெரிசனச்
சீரறி வாய்மறை மஞ்சரியே. (40)

வண்ண மாடகூட மாளிகை மாணிக்க
வாகு வலய மணிமகுடப்
பண்ணே யணங்கே புலவ ரிருதயப்
பணிமணிமறை மஞ்சரியே. (41)

அவுடத மென்பதுந் தன்னுக்குள் ளேசெய
வக்கர மென்பதுந் தன்னுக்குள்ளே
இவிட மவிடமுந் தன்னுக்குள் ளேபுவிக்
கிறை இறைமறை மஞ்சரியே. (42)

சாத்திரப் பொய்யுஞ்சன் யாசிப்பொய் யுமிழி
சழக்கர் பொய்யுஞ் சடுத்தர்பொய்யும்
பூத்திறப் பொய்யும் புராணப்பொய்யு மோசப்
புரட் டடி மறை மஞ்சரியே. (43)

பத்தர்க ணத்து நவமணி யேதயைப்
பக்திமி குந்த பசுபதியே
சித்தர் வழிமணச் செங்கனியே லோக
செங்கோலி யேமறை மஞ்சரியே. (44)

சந்ததங் கண்டேன் றமிழுங்கண் டேனதைச்
சங்கையுங் கண்டேன் சமாதிகண்டேன்
முந்துஞ் சொரூப முதலுங்கண் டேன்றெய்வ
முன்னமு தேமறை மஞ்சரியே. (45)

வெள்ளிக் கிரியென்ப துள்ளே யடிஉடல்
வேண வடிவ விளக்கமடி
உள்ளத் தறிந்து சமாதிகொண் டாற்சுழி
ஒன்று மடி மறை மஞ்சரியே. (46)

துள்ளிக்கு தித்துச்சு கம்பார்த்த துங்கோடி
சுட்டித் தனத்திற் சுழன்றதுவுங்
கள்ளத் தனத்தின் குருக்கள்செய்த மோசங்
கண்டற்றி வாய்மறை மஞ்சரியே. (47)

எல்லா மனித்திய மென்றுசொல் வார்மணி
லெல்லாந் தமதென் றிருத்திக்கொள்வார்
சொல்லாமற் சொல்லுஞ் சுளைகெட்ட மூடரைச்
சுட்டெரிப் பாய்மறை மஞ்சரியே. (48)

மூட்டைக் கடவுள் முளைக்கட வுள்கரி
முட்டைக் கடவுள் முடக்கடவுள்
தேட்டுக் கடவுள் திடக்கடவு ளுடற்
சேத மடிமறை மஞ்சரியே. (49)

கொட்டும் பரம்பரைக் கூட்ட மடிமலக்
குஞ்சிரிப் பாடுங் குமரரடி
தொட்டுந் தொடாமற் றொடரும் பார்ப்பான்வழி
தூரத் திடுமறை மஞ்சரியே. (50)

எட்டுத் திசையு நடுங்க வரச
ரிறைஞ்ச வுலகிலி ருக்குஞ்சித்தர்
தொட்டுக்காட் டியம றைதமி ழின்கதிர்
சொரூப மேமறை மஞ்சரியே. (51)

விண்கதி ரிளைஞி வன தினகர
வேந்தன் வழிநல் விகசிதமா
மண்பதி யுச்சி மலையறிந் தால்ஞான
மற்றொன்றே துமறை மஞ்சரியே. (52)

விண்ணவ ரார்க்கப் புவியார்க் சக்கட
விரைக ளார்க்க வீர ரார்க்கப்
புண்ணிய ரார்க்கப் பொருளார்க்கத் தமிழ்ப்
புகு மறைமறை மஞ்சரியே. (53)

பசுவோ ஞன்ரத்த முண்டு கடைகெட்ட
பறை வியாசன் பணியையேற்று
இசுவைப் பார்ப்பான் பிராமண ஞனது
மெவ்வகை யோமறை மஞ்சரியே. (54)

கிருமிக்கூ டென்று கிளரா தேபொம்மைக்
கெம்பீரங் கொண்டு கிளம்பாதே
தருமிக்கிக் கூடு கருமிக்கிக் காடுயர்
சாசன மேமறை மஞ்சரியே. (55)

கண்டவு டன்கீழாஞ் சாதியென் பார்மோகங்
கண்டவு டன்மேலாஞ் சாதியென்பார்
திண்டுமிண்டு பேசு மண்டப் புரட்டரைத்
தீத்தெறி வாய்மறை மஞ்சரியே. (56)

பேருரு மில்லான் பெருமையில் லான்புகழ்
பேசவு மில்லான் பிதிருமில்லான்
சேருஞ் சிலம்புஞ் சிறப்புமில் லானுன்மா
செஞ்சுட ரேமறை மஞ்சரியே. (57)

உள்ளும்வெவ் வேறு வுடல்வே றுகலை
யுள்ளும்வெவ் வேறு யுளம்வேறு
சீளுஞ்சொள் ளும்வேறு தேவ நரசீவ
சஞ்சீவி யேமறை மஞ்சரியே. (58)

பதினெண் புராண மறுசாத் திரமடப்
பாமரர் வேதம்பா ழிற்பிழைக்கக்
கதியொன் றில்லாக்கூத் தாடிமோச மெனக்
கண்டறி வாய்மறை மஞ்சரியே. (59)

ஏறுது ஏறுது நீரோடை உள்
ளிறங்கு திறங்குது காரோடை
மீறுது மீறுது பாரோடை காண
விண்மணி யேமறை மஞ்சரியே (60)

ராச சிநேகம் படித்திடு வாயோக
ராச சிநேகம் நடத்திடுவாய்
வாசா மகோசரம் பூட்டிடு வாய்கர
வாணமு தேமறை மஞ்சரியே. (61)

அறிவை யன்றிக் கடவுளே துபுரட்
டறிவுக் கல்லுக் கருளுமேது
மறி நெறிமறை யோதலேது வெற்றி
மருளே துமறை மஞ்சரியே. (62)

நாகலோ கத்திற் பிறந்தவ ளேமகிழ்
நானு விதத்துஞ் சிறந்தவளே
மோக விகார மறந்தவ ளேபழ
முன்னமு தேமறை மஞ்சரியே. (63)

பொன்னுற்ற தூல சரீரமடி இதைப்
போகவிட் டுப்பின் புலம்பாதேடி
மின்னென்று கூறி விழுந்த மடையரை
வேண்டிடா தேமறை மஞ்சரியே. (64)

சக்கையைத் தின்று பசுவேள்வி செய்வோரைச்
சாமியென் றுங்கடச் சாதுவென்றும்
முக்கி முணங்கிப் பூசைபுரி வாரதை
முற்று மறமறை மஞ்சரியே. (65)

வண்ட னசட னறிவிலா மூடன்
மடையன் வழக்கை யழித்தொழித்துக்
கொண்ட நாடுகொடாப் பண்டமு தேசுபக்
குண சிதிமறை மஞ்சரியே. (66)

மலக்குழி வெறுப் பென்றிடுவார் குஞ்சு
வழக்கிற் கைலஞ்சம் வாங்கிடுவார்
மலக்குழி யிலே சலக்குழி யிலே
மகிமை யேமறை மஞ்சரியே (67)

சனன மரண கினையா தேபாகத்
தன்னிலே கண்டு தளராதே
மன்னவை ராக்ய மறவா தேயருள்
மகிழ் மகிழ்மறை மஞ்சரியே. (68)

வஞ்ச நெஞ்சமிஞ்சும் பஞ்சப் பயல்களை
வாரிவிட் டேன்முகில் வாணவிட்டேன்
செஞ்சொ லலங்கிர்தச் செஞ்சேவற் காரியின்
சீரறி வாய்மறை மஞ்சரியே. (69)

கத்தித் திரிந்து கதறு தேவீர
காரண மொன்றுங் கழறாதே
சுத்தஞ் சுசியிற் பிறழா தேமனத்
துறவி யேமறை மஞ்சரியே. (70)

ஆன்ம சொரூப மறிந்தவ ளேதெளி
வண்டமா யிரத்தெட் டாண்டவளே
ஊனை யறிந்தே யுடலை வளர்த்திடி
லுண்ணமிர் தேமறை மஞ்சரியே. (71)

ஐந்து மடக்க லகமடக்க லுய
ரண்ட மடக்க லலரடக்கக்
கந்த மடக்கக் கதியடக்கக் கண்டோர்
கர்த்த னடிமறை மஞ்சரியே. (72)

தருசந் தான மரிசந்த னம்பாரி
சாதச்கற் பகமந் தாரமெழிற்
றெரிபாஞ் சசன்ய மிடவலஞ் செயுந்
தேவகி யேமறை மஞ்சரியே (73)

ஊரூத ஆற்று முடலுக்குள் ளேதவ
மூறிய ஆற்று முடலுக்குள்ளே
வீரூன தூநம்மு டலுக்குள் ளேயினும்
வேறிலை யேமறை மஞ்சரியே. (74)

எங்கெங்கு போயினு மின்பங்கள் பூணினு
மிறை யிதையத் திருக்கவேணுந்
தங்கு முடற்றங்க மானலை லோமிகுஞ்
சாசனி யேமறை மஞ்சரியே. (75)

விகாரக் குடும்பம் வெகுபேர் கள்தவம்
வேண்டுங் குடும்பஞ் சிலபேர்கள்
அகாரக் குடும்பந் தனையறி யாரிதை
அறி யறிமறை மஞ்சரியே. (76)

நிறைந்த செல்வநி றைந்தஞா னமறை
நிறைந்த கீர்த்தி நிறைந்ததர்மம்
நிறைந்தவை ராக்ய நிறைந்த சம்பத்து
நிறைந்து வாழ்மறை மஞ்சரியே. (77)

சுத்தமுட் டாளோ தொளாயிரம் பேர்மணி
தோன்றுமுட் டாள்தொண் ணூ றாயிரம்பேர்
பித்தமுட் டாள்கன வாயிரம்பே ரரண்
பேணிடு வாய்மறை மஞ்சரியே. (78)

பூட்டை யுடைக்கப் புறப்படு வார்மனப்
பூட்டை யுடைக்கப் புறப்பட்டிடார்
வீட்டை விளக்கி விளக்கிடி லோவற
விளைவு காண்மறை மஞ்சரியே. (79)

நாதத்தி லேவேறு பட்டது வோபெண்க
ளுதத்தி லேவேறு பட்டதுவோ
வேதத்திற் சாதி விரித்த வியாசனை
வீழ்த்திடு வாய்மறை மஞ்சரியே. (80)

பிறத்த லிருத்தல் வளர்தல் குறைதல்முன்
பின்மாறு பட்டு மரித்தல் பினு
மறத்த லிறத்தல் சறுத்த லகற்றுபண்
மகி பதிமறை மஞ்சரியே. (81)

மண்ணுங்கல் லுஞ்செம்புந் தெய்வமா னல்வேறு
மண்டல பேது மணமேது
புண்ணும் பொடுகும் புரளுநாய் பேய்சொன்ன
புரட் டடிமறை மஞ்சரியே. (82)

அறிவின் சக்தி யகிலமடி முத
லறிவின் சக்தி யகண்டமடி
குறியி னெற்றிக் கிருபுருவத்திடை
குணங் கொளுமறை மஞ்சரியே. (83)

வேகாத விட்டையும் வேகவைப் போந்தினம்
வேகிற விட்டைவே காமல்வைப்போ ஞ்
சாகா வடலையுஞ் சாகவைப் போமிந்தத்
தன்மையைக் கேள்மறை மஞ்சரியே. (84)

பத்தாஞ்சான் பச்சிலை கிள்ளவே ணு முடற்
பத்தாஞ்சான் பச்சிலைப் பள்ளவே ணுஞ்
சித்தாஞ்ச புத்தி புகட்ட வே ணுமணிச்
சிரழி வேன்மறை மஞ்சரியே. (85)

பிச்சை யெடுக்கத் திரிவார் கள்புலைப்
பிச்சை கொடுக்கத் துணியார்கள்
சிச்சி தெரிந்த துரையா திழிஞரைச்
சீரழிப் பாய்மறை மஞ்சரியே. (86)

மூட்டை கொசுகைக் கடிக்கவிட்டு மண்ணில்
முட்டித் தவிக்குமுட் டாள்களைப்போல்
வீட்டிற் சுரரை யிருத்திக் கவலையான்
வெந்திடா தேமறை மஞ்சரியே. (87)

அஞ்சு மடக்கலா மஞ்சுக்குட் போகலா
மஞ்சை மடக்கி யடக்கிடலாம்
பஞ்சைப் பயல்களை நீக்கி யறிவொன்றைப்
பார்த்தி டடிமறை மஞ்சரியே. (88)

விண்வாத கொள்ள விளையா தேயாக
வேள்விமுன் னிற்க விரும்பாதே
பேணுயி ருந்தள்ளும் பாவமடி ராசப்
பெண்மணி யேமறை மஞ்சரியே. (89)

உச்சி மலைமேலே தெப்பக் குளமதி
லொன்றுஞ் சோலையு முறுத்துநலஞ்
சச்சிலை சச்சிலை இச்சை பெரும்புகழ்
தானே தடிமறை மஞ்சரியே. (90)

எட்டலோ எட்டலோ எட்டுக்குள் ளேமிகு
வின்ப மிருக்குது ரெண்டுக்குள்ளே
எட்டைப் பிடித்து இரண்டடக் கக்கலை
எட்டெட் டேதோமறை மஞ்சரியே. (91)

மூழ்ச்சு மான பரிபூரணி அற
மூன்றுல கத்து முறுகாரணி
குமிச்ச மந்த்ரமே தேது விதமலர்க்
குணங்கா ணுமறை மஞ்சரியே. (92)

உள்ளத்தி னுள்ள வொளிபெருகி னுள
முள்ளத் தனைத்து முளமலரும்
பள்ளத் திடைவிழும் நீரைப்போ லேமகிழ்
பற்றிப் பிடிமறை மஞ்சரியே. (93)

அறிவு ரைத்த மறையறி வாய்தல
வறிவு ரைத்த வகமறிவாய்
குறி குறித்த வறமறி வாயோகக்
குறிகா ணுமறை மஞ்சரியே. (94)

அமைச்சன் றாத னரண்பொரு ணாடு
வாலோசனு சபாவ திகமிகுஞ்
சமத்து முன்படை வெண்ணங் கணங்கொளுஞ்
சம்ப்ரம மேமறை மஞ்சரியே. (95)

உருட்டுப் புரட்டுத் திருட்டிற் கைதேர்ந்த
வுலுத்தன் குணத்தினி லூருசுற்றிக்
கரட்டு வரட்டுப் பரனு வடைக்கனைக்
கழி சழிமறை மஞ்சரியே. (96)

உள்ளுளே வேறு வுயிரில்வே றுபொன்
னுடம்பினில் வேறு வுரத்தில்வேறு
பள்ளுக்கு மூத்த பறைவியா சன்கதை
பாராதே டிமறை மஞ்சரியே. (97)

மோகத்தில் வேறு முகத்தில் வேறுபல
முன்னிலை வேறு முனையில்வேறு
பாகம்பி ரித்த படுபாவி தோஷிணையப்
பாராதே டிமறை மஞ்சரியே. (98)

மாத மிருமுறைப் பட்டினி யாலுயிர்
வளரு நீண்டவா யுள்வளரும்
போதமி குக்கும் புதிதறி யுமிதைப்
போற்றிடு வாய்மறை மஞ்சரியே. (99)

ஆதி பகவனும் வேறு மோதிக
ழண்ட நவகண்டம் வேறுமோ
சோதி யொளியளி வேறு மோபழஞ்
சோம கிரிமறை மஞ்சரியே. (100)

தன்னைக்காத் தபினு லைகைக்காத்துக் கற்ற
தன்னைக்காத் துமறை தன்னைக்காத்து
பன்னைக்காத்து முகிற் பண்ணைக்காத் தாற்சுப
பாழே தடிமறை மஞ்சரியே. (101)

திண்ணைச்சோம் பேறிகள் வேதமென் றேகதை
செப்பிவைத் தார்முழு மாடுதின்றே
பண்ணை மகுடி யருள்கிரு பாவரப்
பாமணி யேமறை மஞ்சரியே. (102)

அந்த யுகங்களைச் சொல்லா தேகிரி
யரணை விட்டு மகலாதே
இந்தக் கலியுக நல்லதென் றேமனத்
தேத்திடு வாய்மறை மஞ்சரியே. (103)

கேளுங் கேளுமிரு நூறுஞ்சொன் னேனருட்
கேள்விசண் முகன் கிருபைசொன்னேன்
ஆளு முடற்குளி கையாயி ரஞ்சொன்னே
னறி யறிமறை மஞ்சரியே. (104)

மிக்க விரதம் படைப்போரி லோடிடா
வேந்த னுறவு மிகுத்திருந்தாற்
றக்கநாற் றிசைப ணிந்து வணங்கிடுஞ்
சற்சனி யேமறை மஞ்சரியே. (105)

சுத்தவை ராக்யன்து திதி யன்குலோத்
துங்கன் துறையின் துறையின்கலாப்
பத்தன் பவுத்த னவுடதத் தையுனும்
பைங்கிளி யேமறை மஞ்சரியே. (106)

அஞ்சிலே பிஞ்சிலே போகு முடலினுக்
காசைவைத் துப்பே ருருஞ்சபையிற்
பஞ்சாய லஞ்சம்வாங் குழுழு மூடரைப்
பறித் தெறிமறை மஞ்சரியே. (107)

கஞ்சிக் கலந்து மடத்தைக் கட்டிப்பிறர்க்
கஞ்சிக் கலந்தே யிடத்தையொட்டிப்
பஞ்சைத் தொளைத்துக் கடவுளைக் காட்டுவார்
பாமர ரேமறை மஞ்சரியே. (108)

சிந்தையி னன்புந் தெளிவுறு மாவிளந்
திரையன் றன்வழிச் செங்கனகச்
சுந்தரி யேயறி வன்றிமற் றென்னையுந்
துதிக்கா தேமறை மஞ்சரியே. (109)

முட்டாப் புராண முனிப்புரா ணமுழு
மோசப் புராண முதலடிக்குங்
கட்டுப் புராணங் கடைப்புரா ணந்தனைக்
காணாதே டிமறை மஞ்சரியே. (110)

வீம்புக்குத் தூம்பை விளைக்கா தேமோக
வீம்புக்குச் சோம்பை விளைக்காதே
காம்புக்குச் சேம்போ கருணைப் பிரவாகக்
கண்மணி யேமறை மஞ்சரியே. (111)

அனல்பி றந்த துடலுக்குள் ளேபூத
வணிபி றந்த துடலுக்குள்ளே
மனமி ருந்த துடலுக்குள் ளேசெய
மற்றொன்றே துமறை மஞ்சரியே. (112)

நீங்கா வுழவுஞ் சமரசச் செங்கோல்
நிலாவு நிலவேமுன் னீர்ப்புவியிற்
பாங்கான வாங்கார மில்லாவி டிற்கையிற்
பாரேத டிமறை மஞ்சரியே. (113)

மண்டலங் காத்துச் சுழியிற் பிரணவ
மந்திரங் கற்று மகிதலத்திற்
கண்டநாட் டைவிடாப் பிடுகு பின்செங்கோல்
காருண்ய மேமறை மஞ்சரியே. (114)

சொல்லுக்குள் ளுமன விள்ளுக்குள் ளும்பதந்
தொல்லுக்குள் ளுங்கடந் தோத்தரிக்கக்
கல்லுக்குள் ளும்பல செல்லுக்குள் ளுமருள்
காணுமோ டிமறை மஞ்சரியே. (115)

பார்க்கத் தகுந்தவு டையோ டுடலைப்
பரிதி யொளிபோற் பதித்திருந்தார்க்
கேர்க்கை மடையருங் கீழ்ப்படு வாரென்ப
தெண்ணிடு வாய்மறை மஞ்சரியே. (116)

வெட்டிக்கூட் டத்தையுந் துட்டப் புலியையும்
வெட்டிவிட் டுமன வேட்கைகொளாச்
சட்டிச்செ விட்டையு மட்டிப் பயலையுஞ்
சங்கரிப் பாய்மறை மஞ்சரியே. (117)

அண்டப் புரட்டரு மாகாயக் கொம்பரு
மாகாதா காது வரண்மனைமுன்
பிண்டிபா லங்கத்தி யிட்டிச் சமுதாட்டாற்
பேர்த்தெறி வாய்மறை மஞ்சரியே. (118)

மாமுனி போற்று மிளங்கிளி யேயற
மாதவ ரேத்து மதிபதியே
நிமையி லாவழி யுச்சிச் சுழிமுனை
தேர்ந்தறி வாய்மறை மஞ்சரியே. (119)

சண்ட வெமனே சமவெம னேமடிச்
சம்ம னெமனே தடவெமனே
கண்ட வெமனேகா ணுவெம னேவந்தாற்
கறைத்தெ றிமறை மஞ்சரியே. (120)

மணிகு றைந்தா ருறவுவேண் டாமதி
மகிழ்கு றைந்தார் வரவுவேண்டாங்
கெணி மணிபணி கணி யணிமணிற்
கெம்பீரி யேமறை மஞ்சரியே. (121)

வெண்சாரைச் சங்கை விழுங்கி விடுவுடல்
வேண்டுமட் டும்வய தெண்ணிவிடு
பண்சாரை தங்கும் பலமுந்தங் குந்தேவப்
பழம்ப திமறை மஞ்சரியே. (122)

ஊக்க முயிர்ப்பிக்கு மென்ற முறையை
யுலகில் மறந்தா லுயிரிறக்கும்
ஆக்கலுங் காத்த லழித்தலு நம்மறி
வானந்தந் தான்மறை மஞ்சரியே. (123)

எச்சிலைத் தவர்க டவுளென் பார்பிச்சை
யேற்கு மிழிஞர் கடவுளென்பார்
செச்சைத் தவளைத் தொனிதுதிக் காகுமோ
சித்தமு தேமறை மஞ்சரியே. (124)

நீர்விளை யாட்டால் நினைவூறு மறு
நீர்விளை யாட்டால் நிலைபெருங்
கார்வள மிஞ்சுஞ்சோ மகிரி மாதவக்
கற்பக மேமறை மஞ்சரியே. (125)

வீர னறிஞ னிளைஞன் முதிர்தவ
மீளிபோ தகன்வி ழைவுகொண்டாற்
சூரப் பூடிக்கத் துணைதரு வாரகத்
தோத்திரஞ் செய்மறை மஞ்சரியே. (126)

எக்கியப் பலிகொ டுத்திடா தேதமிழ்க்
கேது வெதிர்மொழி கூறிடாதே
முக்கி முணங்கிடும் பிச்சைகீர் வாணத்தை
மூட்டின ரேமறை மஞ்சரியே. (127)

கோளன் புதியன் குடியர்க ளையொற்றர்
கூட்டத்திற் சேர்க்கவுங் கூடாது
வாளுஞ்சூ லமும்வ லமிருந் தும்புறம்
வாங்கிடு வார்மறை மஞ்சரியே. (128)

காலில்லை கையில்லை வாயில்லை மேலில்லை
கானில்லை வானில்லை காலமில்லை
பாலில்லை நீரில்லை மோரில்லை நேரில்லை
பரம்ப ரமறை மஞ்சரியே. (129)

பலவெ லாமுள வலக லாதலப்
பானுவே ஞானப் பசுங்கதிர்நன்
னலமி லகிய நிலவு லகாளும்
நாயகி யேமறை மஞ்சரியே. (130)

எலியின் ஞானமும் புலியின் மோனமு
மெருமைத் யானமு மேதெதற்குப்
பலிக் குதவுமா படைக் குதவுமா
பரஞ்சோ திமறை மஞ்சரியே. (131)

மேடை யிருக்குது வீட்டுக்குள் ளேகாளை
மேய்ந்து திரியுது காட்டுக்குள்ளே
சாடை செயுநெற்றி நடுவ நிமறைச்
சாசனி யேமறை மஞ்சரியே. (132)

நில்லாது நில்லாது நெஞ்சுக்குள் ளேபுகழ்
நீட்டி நிமிராது நெஞ்சுக்குள்ளே.
பொல்லாது பொல்லாது கல்லிற்கண் டீதுவிண்
புரட்ட டிமறை மஞ்சரியே. (133)

சிந்தைத் தெளிவுந் திறத்தெளி வும்படைச்
செர்க்கைத் தெளிவுந் திருத்தெளிவும்
பந்தித் தெளிவு மிருந்திடி லெங்காடும்
பணிந்தி டுமறை மஞ்சரியே. (134)

சாகா வடிவிற் கறிவுவே ணும்புகு
சாசு வதத்திற் கறிவுவே ணும்
பாகா முடலை வளர்க்கவே ணுஞ்சுபம்
பாகுபா டேமறை மஞ்சரியே. (135)

வானமும் பூமியு மொத்ததைப் போல்மனம்
மன்னு மறிவுமொத் தேயிருந்தால்
மோனமு ஞானமு முன்னிலை யில்வரு
முன்னறி வேமறை மஞ்சரியே. (136)

முத்தான வித்து முதற்பொரு ளும்பர
மூர்த்தியு மான முளைக்கொளுந் துஞ்
சத்தான சித்துநா மன்றிவே றேதர்ம
சாசனி யேமறை மஞ்சரியே. (137)

கோமயத் தெய்வங் குகையின்தெய் வம்பல
கூக்குரற் றெய்வங் குறத்தெய்வமும்
காமம் பிடித்த கசட்டுப் பயல்களின்
கட்டுக் கதைமறை மஞ்சரியே. (138)

கரைகா ணுதக டலுக்குள் ளேயுப்புக்
கட்டிமி தந்திடக் கண்டதைப்போற்
பரை தெரிந்தோமென் றுரணஞ் சொல்வது
பகட்டடிமறை மஞ்சரியே. (139)

உடலி லுள்ள கசட்டைத் துடைத்தபி
னுளத்தைக் கட்டி யுவத்திடலா
மடைய ரீதறி யாமல்வெவ் வேறென்று
மடிகிறார்மறை மஞ்சரியே. (140)

உச்சி மலைமேலே கோட்டை யடியது
ளோடுறு காளை யுளமதடி
வச்சதுஞ் சொச்சது மெச்சுவ துஞான
வழி யறிமறை மஞ்சரியே. (141)

வா னுமி கொண்டு வளநா டறிந்த
மதிமதி யேமிகும் வாரிதியைத்
தானுக வாண்டு திரைகொளு மாதலச்
சக்ரவர்த் திமறை மஞ்சரியே. (142)

தொந்தமி குந்தவீ ரப்படை யையுளத்
தோழரா வைத்துத் துதிபுரிந்து
அந்தர லோகந் தனையாள்வ துந்தல
வரசி யல்மறை மஞ்சரியே. (143)

உளம தின்செம்மை யுவர்நி லத்தன்மை
யுளவ தென்று ரைபுகழக்
களவ ளதிலாப் புலமு ளத்தவங்
கண்குளி ருமறை மஞ்சரியே. (144)

அறந் துறந்த வறக்கொடி யேகால
மறிந்தெ ழுந்த வணிக்கொடியே
மறந் திறந்து விரும்பூ துந்திகழ்
மகிமை காண்மறை மஞ்சரியே. (145)

பாத பரணிசர் தாரிமோ கனம்
பகதூர் மோகனந்தே வகுஞ்சரி
போத மகுடிசித் தர்மகிழ் வுதேமற்
பொன்கள பமறை மஞ்சரியே. (146)

பவளங் கொட்டு மழகர் மலைக்கதிர்ப்
பாயுஞ்சோ மகிரிப் பக்கத்திலே
குவளைக் கண்மா யிருக்கு தடிமுப்பூக்
கொள்ள நலமறை மஞ்சரியே. (147)

தீயவே டங்களைத் தீய்த்திடு வாய்மதத்
தீயவேள் வியைச்சி தைத்திடுவாய்
தாயமு தைமறை யாக்கிடு வாய்லோக
தற்பர மேமறை மஞ்சரியே. (148)

குடிமை பண்பு புகழிரவு வச்சங்
கொளு முழவு குடிசெய்வகை
மடியு ருதநா ணன்றிம னச்சான்றை
மனத்த றிமறை மஞ்சரியே. (149)

இடித் தடித்துச்சொ லாரவை மீதினி
லேகிடி லோமுத லெல்லாங்கெடும்
படித் தலத்திற் புகழ்மகி மையிலே
பண்டமு தேமறை மஞ்சரியே. (150)

செய மலரத் திருமல ரப்புவித்
திற மலரத் திசைமலரச்
சுய மலரத் துதிமல ரத்துணை
தோன்று மணிமறை மஞ்சரியே. (151)

மலை நதிதீர்த்த மாடுமென் றுங்குள
மாடியைப் பார்ப்பனக் கியுமென் றுங்
கலையி லாமுழு மோசக்கா ரர்செய்த
கதைய டிமறை மஞ்சரியே. (152)

172791

தூய்மை விளையப் பொழில்விளை யவளந்
தோன்றி விளையத் துளிர்க்குங்குகன்
வாய்மைமா ரூதவு டற்சாத னம்பெற்ற
மங்கலம் பார்மறை மஞ்சரியே. (153)

கண்ட களபம்ப டீரவச் சிரம்பொன்
கற்பக நீண்முடிக் கங்கணிமன்
முடி தரித்து முடிதரிக் குமுயர்
முதன்மு தன்மறை மஞ்சரியே. (154)

துடி யுடுக்கையெக் காளஞ்சின் னங்கொம்பு
துத்தாரி டங்கா துவள்பேரிகை
நடிதம் பட்டம் டமாரங் காளம்வீர
நடிக்கு மாமறை மஞ்சரியே. (155)

தாதெழு கோபுர மண்டப முன்கோயிற்
றம்பல முன்னவை சார்ந்துநவ
மாதெழு விஞ்சை பரவுசோ மகிரி
மாதவ மேமறை மஞ்சரியே. (156)

அவையஞ் சாமை யவையறி யலள
வடக்கங் குறிப்ப றிதலகச்
சுவை செவிதுணை தூது வரசர்கள்
தோற்றஞ்சே ருமறை மஞ்சரியே. (157)

தெளிந் தெடுத்த நவமணி யேகண்ணிற்
றேர்ந்த தமிழ்ச்செஞ் செழுங்கனியே
வளிந் திருக்கிய குண்டலி யைமன
மறிய றிமறை மஞ்சரியே. (158)

சொற்பல பேசித் துதித்திடு வாரிழி
தோத்திரங் கொண்டு துதைந்திடுவார்
கற்பல கையொத்த குத்திரர் கள்தொழில்
காணுமே டிமறை மஞ்சரியே. (159)

தன்னை மறந்து சமம்நிறைந் துகன்மந்
தன்னை மறந்து சதிமறந்து
மன்னை மறந்து மணமறந் துபோத
மகிழ்வ றிமறை மஞ்சரியே. (160)

ஆழக் குழியிலே முத்திருக் கக்காணு
வாழக் குழியிலே முத்தெடுத்தார்
சோழக் கதிருக்குங் கம்பங் கதிருக்குஞ்
சொந்தமுண் டோமறை மஞ்சரியே. (161)

இரு கலையு மிருக்குத டிவழிக்
கிரு கலையும் பெருக்குதடி
ஒரு கலையல பலக லையல
உளத்த றிமறை மஞ்சரியே. (162)

சிக்காது சிக்காது ஓடிப்பார்த்தா லொளி
சீறுது சீறுது தேடிப்பார்த்தால்
முக்காலுஞ் சத்திய முச்சிகண் டேன்சுழி
முளைய றிமறை மஞ்சரியே. (163)

சத்திய மானதுந் தன்மய மானதுஞ்
சாகர மானதுஞ் சார்ந்திருந்தாற்
பத்தியே மது பணிவே துஞானப்
பழம்ப திமறை மஞ்சரியே. (164)

பெண்களைக் கேவலம் பேசிடு வார்முழுப்
பேச்சினி லாச்சாரம் பூசிடுவார்
கண்கொளா மோச்சத்தைக் காட்டிடு வார்சுயக்
கழுதை கள்மறை மஞ்சரியே. (165)

மூலத் தலத்திலே முச்சுழி யேயதில்
முப்பாழுங் கண்டால் முதற்சுழியே
நாழிக்கி நாழிநா ஞழிகூ டிவரும்
நாயகி யேமறை மஞ்சரியே. (166)

வாசியை யுள்ளே யடக்கி விடுசெழு
மணியில் ஞான மணியை நடு
கேசி சிவவுரு மவ்வுரு ஒன்றதாங்
கேசய மேமறை மஞ்சரியே. (167)

மாணிக்கத் தூணு மறையு தடிபுல
வாக்குக்கா யத்தில் நிறையுதடி
காணிக்கிக் காணி களஞ்சேருஞ் சித்தர்
கண்டிக்க லோமறை மஞ்சரியே. (168)

விட்ட எழுத்து விடாஎழுத் துப்பகல்
விண்ணி னெழுத்து விடையெழுத்து
வட்ட எழுத்து மணிஎழுத் துக்குரு
வாசம டிமறை மஞ்சரியே. (169)

சக்கரை முக்கனி பாகு பழச்சுவை
தாவர மேகச் சராசரமும்
பக்குவ செஞ்சொ லிதையா மிர்தமுணும்
பார்ப்பதி யேமறை மஞ்சரியே. (170)

கண்ணுண் மணியுங் கதிர்மணி யுமுளக்
கண்ணுண் மணியுங் கருத்தறிந்தாற்
பெண்ணுமண் ணும்பொன்னும் பின்னுற் றுடருமோ
பிறப்பி லாமறை மஞ்சரியே. (171)

ஆறுதா ரத்து நிலையறிந் துபுன
லண்ணுக்கு மேலே யமைத்தமைத்துக்
கூறுன வண்ணுக் கமுதை யுணவளங்
கோதேத டிமறை மஞ்சரியே. (172)

அஞ்ஞானம் நீக்கும் பகவனே யேபணிந்
தச்சர மேற்று மகத்தினையே
மெஞ்ஞான மாக்கும் வெளிதலங் குந்தமிழ்
விஞ்சை மகிழ்மறை மஞ்சரியே. (173)

## சித்தர் வம்மிசாவளி.

தெளி வெழுமுளக் களிவ ளநலச்
சித்தாதி யோகந் தெரிந்தறிந்து
மள விளகுள தளவொ ரிசொலென்
மரப றிமறை மஞ்சரியே. (174)

சுத்தன் சுதாநிதிச் சோழனே மேழுமண்
துதிக்குஞ் சுப்பிர தீபச்சோழன்
பத்தன் சுதாபதிச் சோழன் மிகுசுதைப்
பானச்சோ ழன்மறை மஞ்சரியே. (175)

சுகித ரஞ்சனச் சோழன் கரமாரிச்
சோழன் துதிமறைச் சோழன்பதி
விகித மன்குல வித்தோநா கர்தொழும்
வேள்மக ளேமறை மஞ்சரியே. (176)

புவன புட்கர குலோத்துங் கன்றவப்
புனிதன் மன்முடிப் பொன்பிடுகு
கவன மனச தாதப சியருட்
களிறு பார்மறை மஞ்சரியே. (177)

கடக கங்கணன் நாமநா மன்ரவிக்
கரன் படாடோபன் கங்கணன்மன்
புடவி வேகன் சுரர்களின் மர்த்தனன்
பொன்தடா கன்மறை மஞ்சரியே. (178)

தழை தபாதபன் வழிதே வதேவன்
சக்கிரி வேக தடாககரன்
பழ விருடி விருடி பராபரன்
பழம றிமறை மஞ்சரியே (179)

பின்னவன் சமத்த ரச்சக மாமுனி
பெற்றதே வசிம்மம் பேரருளான்
என்ன கருமாள் பராக்ரம வல்லவன்
இன்பர சமறை மஞ்சரியே. (180)

கடாச்ச நற்றவத் தேவதே வச்சோழன்
கனிந்த ரத்னக ரச்சோழன்
திடச் சமர்த்தன் சிவமணிச் சோழன்சீர்
சீரறி வாய்மறை மஞ்சரியே. (181)

த்தாகத மார்த்தாண்ட னின்ப சகச
சலிலமார்த் தாண்டன் றதியுதவும்
பத கிதசினேந் திரமார்த் தாண்டனின்
பழம் பழமறை மஞ்சரியே. (182)

மாரிமார்த் தாண்டப் பிடுகு பிறங்கடை
வன்னிமார்த் தாண்டப் பிடுகுமுளைத்
தாரிய சனிமார்த் தாண்டப் பிடுகுசேய்
தர்மார்த்தாண் டன்மறை மஞ்சரியே. (183)

குடகன் கிள்ளிமா றன்மார்த்தாண் டன்பின்
குடகன் சலத ரப்பிடுகு
தட மருமா னிசாபதி மார்த்தாண்டன்
றமர் தமர்மறை மஞ்சரியே. (184)

தன்னைய றிந்தவ வைமார்த்தாண் டன்கன
சதுரர்மார்த் தாண்டன் தமிழுளவின்
மன்ன னிரவிமார்த் தாண்ட னிருதுமன்
மார்த்தாண் டன்மறை மஞ்சரியே. (185)

மஞ்சுமார்த் தாண்டன் வளவன் மணிகற்ப
வச்ரமார்த் தாண்டன் மகிழும்விற்ப
னன்சப லைமார்த்தாண் டன்செய தரப்ப
ணன்பண ஞைமறை மஞ்சரியே. (186)

பொருநன் மார்த்தாண்ட னுலக மார்த்தாண்டன்
புனித வியவமார்த் தாண்டன்புண்ய
கிருதிமார்த் தாண்டன் பளிங்குமார்த் தாண்டன்
கிதி கிதிமறை மஞ்சரியே. (187)

வழி வழிதுங்கன் சொக்கனுண் டிபுகழ்
வர மணிசர பாசரபம்
பொழில் மணமணச் சோழன் றவமணி
புனிதம் பின்மறை மஞ்சரியே. (188)

தேரர்மார்த் தாண்டன திபமார்த் தாண்டன்
திகழுங் கவுரிமார்த் தாண்டன்புய
வீரமார்த் தாண்டன் விபுதர்மார்த் தாண்டன்
விளை வறிமறை மஞ்சரியே. (189)

மவுலி மார்த்தாண்டன் மதிமன் சக்கிரி
மார்த்தாண்டன் வீழ்க்கைமார்த் தாண்டன்துவர்
பவள மார்த்தாண்ட னளவி லாத்தமிழ்ப்
பசு பதிமறை மஞ்சரியே. (190)

மகன் மகன்குலோத் துங்கன் சயதரன்
மணி மணிமறை விக்கிரமன்
தகுஞ்சு தன்சத்து ராந்தகன் மாதவந்
தானறி வாய்மறை மஞ்சரியே. (191)

பூத்தல் பழுத்தல் புகழ்தல் திகழ்தல்
புரத்தல் புகட்டல் பொதுவறிவைச்
சேர்த்தல் தெளிதல் திரட்டல் தினகர
சிம்ம மறிமறை மஞ்சரியே. (192)

சோதிமார்த் தாண்டன் பகவமார்த் தாண்டன்
துவர்மழ வராயச் சோழன்பழ
நீதிப டீரமார்த் தாண்ட னகருக
கின்னய மேமறை மஞ்சரியே. (193)

சந்த்ரமார்த் தாண்டன் தமர்தம ருமகிழ்
தந்தை விகிதமார்த் தாண்டனருள்
விந்தை மலரளிச் சோழன் மணிவீர
வேற்சோழன் சாண்மறை மஞ்சரியே. (194)

திசைகமழ் சோழன் சிவமணிச் சோழன்
திகழ் மரகதச் சோழன்றவ
விசை புளகமார்த் தாண்டன்ரா சக்கொடி
விழ்ந்திடா தமறை மஞ்சரியே. (195)

செச்சைமார்த் தாண்டன் சிறுநகைச் சோழன்
றெருட்கு மரிமார்த் தாண்டன்றிரட்
பச்சை யிமையமார்த் தாண்ட னறிநெறிப்
பதி பதிமறை மஞ்சரியே. (196)

சததளச் சோழன் கருணி மார்த்தாண்டன்
தருசு தைவரை யன்ததும்பும்
பதம றைமணிச் சோழன்செம் பியன்பொன்
பக ருமறை மஞ்சரியே. (197)

தேர்கண்ட சோழன் பிடுகுமார்த் தாண்டன்
திரையன் குடகுமார்த் தாண்டன்பலப்
பார்கண்ட விக்ரமார்த் தாண்டன் பழம்பழப்
பதி நிதிமறை மஞ்சரியே. (198)

பிண்டிமார்த் தாண்ட னெதிரிமார்த் தாண்டன்
பிடுகு மூதியமார்த் தாண்டன்பெலத்
தண்டி முனிவர்மார்த் தாண்டன் சுககடற்
சாசனி யேமறை மஞ்சரியே. (199)

வேளுமார்த் தாண்டன் மதலைமார்த் தாண்டன்
விகசித துங்கமார்த் தாண்டன்புல
வாளு புலவர்மார்த் தாண்டன் சரதரு
மார்த்தாண் டன்மறை மஞ்சரியே. (200)

சித்ரமார்த் தாண்டன் மழலை மொழிமகிழ்
செங்கோல்மார்த் தாண்டன் றிரங்கமழும்
புத்ரகற் பகநாட் டரையன் விஞ்சையின்
புத்தமு தேமறை மஞ்சரியே. (201)

சிட்டமார்த் தாண்டன் சுபாசு பநதிச்
சேய்கண்ட சோழன் தெவமார்த்தாண்டன்
இட்டன் தேவதேவ மார்த்தாண்ட னுளமுள்
ளிறை யிறைமறை மஞ்சரியே. (202

மாலைமார்த் தாண்டன் மணியின் விகசித
வாகைமார்த் தாண்டன் மளவளவன்
சூலமார்த் தாண்ட னிலவுமார்த் தாண்டன்மன்
துதி துதிமறை மஞ்சரியே. (203

தொன்மர புற்றந ரேந்திரன் முன்தமிழ்ச்
சுந்தரன் வாகு தொழுமிறையன்
றன்மதி மன்சூடா மணிச்சோ ழனென்றன்
தாதைதக ளேமறை மஞ்சரியே. (204

செங்கோட் கதிபதி ராஜரா ஜேஸ்வரச்
சித்த னறைந்தேன்செஞ் சொன்மிகுக்க
மங்காத பாக்க ளிருநூற்றி யைந்துடன்
மகிமை பார்மறை மஞ்சரியே. (205

மறைமஞ்சரி ஞானக் கும்மி
முற்றிற்று.

சென்னை-600 008.
172791